அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.293/2015
தேதி. 11.12.2015

# ICF தொழிலாளர் ஹேமந்த் தீக்குளிப்பு அதிர்ச்சி அளிக்கிறது ICF நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆர்.சரத்குமார் MLAஅறிக்கை

ஐ.சி.எப் ரயில்பெட்டித் தொழிற்சாலையில் கடந்த 17 ஆண்டுகளாக பயிற்சி பெற்ற பயிற்சிப் பணியாளர்கள் சுமார் 5000 பேர் 1998 ஆம் ஆண்டு முதல் பணி நியமனம் செய்யப்படாமல் அவதிக்குள்ளாகி வருகின்றனர். ஐ.சி.எப் தொழிற்சாலையிலேயே பணி நியமனம் கிடைத்துவிடும் என்று நம்பிக்கையில் வேறு எந்த வேலைகளுக்கும் செல்லாமல் சுமார் 17 ஆண்டுகள் மேற்சொன்ன 5000 குடும்பங்களும் மன உளைச்சலில் வாழ்ந்து வருகிறார்கள். நிறுவனத்தின் பொது மேலாளருக்கு இவர்களைப் பணி நியமனம் செய்ய அதிகாரங்கள் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஐ.சி.எப் பின் பயிற்சிப் பணியாளர்கள் ரயில்வேயின் பிற தொழிற்சாலைகளிலும், மண்டலங்களிலும் பணி நியமனம் செய்துள்ள முன்னுதாரணங்களும் உண்டு.

## தீக்குளிப்பு

மேற்படி பயிற்சித் தொழிலாளர்கள் தொடர்ந்து தினசரி தொடர் உண்ணாவிரதம் மற்றும் அறப்போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார்கள். விரக்தியின் விளிம்பில் நின்று போராட்டம் நடத்தி வந்த தோழர்களில் 35 வயதே நிரம்பிய ஹேமந்த் என்பவர் நேற்று தீக்குளித்து மரணம் அடைந்துள்ள செய்தி மிகவும் வேதனையளிக்கிறது.

*எதையும் கண்டுகொள்ளாமல் இருந்து வரும் ஐ.சி.எஃப் நிறுவனம் இந்த துயரச் சம்பவத்திற்குப் பிறகாவது பயிற்சித் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கிட முன் வர வேண்டும். இது போன்ற சம்பவங்கள் தொடராமலிருக்க மத்திய, மாநில அரசுகள் ரயில்வே தொடர்பான விரிவாக்க திட்டங்களில் பயிற்சித் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பு வழங்க முன்வர வேண்டும். தன்னை அழித்துக் கொண்டாவது, தன்னைப் போல் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக தன் உயிரை இழந்த ஹேமந்தை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*நன்றி, வணக்கம்,*
*உழைப்பவரே உயர்ந்தவர்,*
*என்றும் அன்புடன்,*

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்